## அம்பலவாணா

ஹர ஹர சிவ சிவ அம்பலவாணா
அம்பலவாணா பொன்னம்பல வாணா ( ஹர ஹர )
ஆனந்தத் தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா
நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா
சிவகாமிப் பிரிய சிவரஜா
சிதம்பரேசா நடராஜா ( ஹர ஹர )

## அம்பலத்தரசே

அம்பலத்து அரசே அரு மருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொது நடத்து அரசே புண்ணியனே
புலவர் எல்லாம் புகள் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மய தேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
மலை தரு மகளே மட மயிலே
மதி முக அமுதே இளங் குயிலே ( அம்பலத்தரசே....)

ஆனந்தக் கொடியே இளம் பிடியே
அற்புதத் தேனே மலை மானே
படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரி பிரம ஆதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா ( அம்பலத்தரசே....)

கருணா நிதியே சபா பதியே
கதி மா நிதியே பசு பதியே
கனக சிதம்பர கங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர
சங்கர சிவ சிவ மா தேவா
எங்களை ஆட்கொள வா வா வா
அரகர சிவ சிவ மா தேவா
அருள் அமுதந் தர வா வா வா ( அம்பலத்தரசே....)